<u>செய்தி வெளியீடு</u>

செ.வெ. எண். 16 நாள். 13.12.2017

**எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, 100 சதவீதம் வாக்களிப்பது தொடர்பாகவும், வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரச்சாரம் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்டது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதியில் பொதுமக்கள் 100 சதவீதம் வாக்குப்பதிவு செய்திடும் பொருட்டு பல்வேறு வகையான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், சுவரொட்டிகள், விளம்பர பேனர்கள், துண்டு பிரசுரங்கள் வழங்குதல், விழிப்புணர்வு பேரணி, கருத்தரங்கம், கலைநிகழ்ச்சிகள் நடத்துதல், கோலப்போட்டிகள், பொம்மை நாடகங்கள், பறையிசைத்து நடனமாடி பொதுமக்களின் கவனத்தை ஈர்த்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், கையெழுத்து இயக்கம், இருசக்கர வாகனத்தின் மூலம் பிரச்சாரம், விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டுதல், பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களான காய்கறிக் கடைகள், அங்காடிகள் மற்றும் சந்தைகள், மீன் அங்காடிகள் போன்ற இடங்களில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் மூலமும், பேருந்து நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் வீடியோ வாகனத்தின் மூலமும் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், வார்டு–41, கொருக்குப்பேட்டை பெரியார் சாலையில் மனித சங்கிலி விழிப்புணர்வும், வார்டு–40, காமராஜர் சாலையில் வண்ண கோலமிட்டும், சுனாமி குடியிருப்பில் கையெழுத்து பிரச்சாரமும், ஜீவா நகரில் இருசக்கர வாகன பேரணி மூலமும், மீன்பிடி படகுகள் நிறுத்தும் பகுதிகளில் துண்டு பிரசுரங்கள் வழங்கியும், வார்டு–39, புது மார்க்கெட் முதல் தெருவில் பறையடித்து நடனமாடி பிரச்சாரமும், புது மார்க்கெட் 2வது தெருவில் பொம்மை நாடகத்தின் மூலமும், வார்டு–42, புத்தா சாலை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கோலப் போட்டி நடத்தியும் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டது.

விழிப்புணர்வு பிரச்சாரத்தில் தேர்தலின் போது அனைத்து வாக்காளர்களும் வாக்களிப்பதன் மூலம் ஜனநாயக கடமையை நிறைவேற்றிட முடியும் என்பதனை எடுத்துரைத்தும், வாக்காளர்கள் அனைவரும் வாக்களிப்பதற்கான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும், அனைத்து வாக்காளர்களும் தவறாமல் வாக்களித்திட வேண்டும் எனவும், என் ஓட்டு என் சுதந்திரம், வாங்காதே! வாங்காதே! ஓட்டுப்போட நோட்டு வாங்காதே!, வாக்களிப்போம், வாக்களிப்போம், ஜனநாயக கடமையினை காப்போம் போன்ற கோஷங்கள் எழுப்பியும், பதாகைகள் ஏந்தியும் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**